14.06.2023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

**EA.No.02/2020 in EP.No.10/2019 in OS.No.3555/1979**

2023-ம் ஆண்டு ஜீன் திங்கள் 14-ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய ம.சா.**2**-வது நபரின் வாக்குமூலம் **1969**-ம் ஆண்டு 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.**P.**ரேணுகாதேவி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலையரசன் | த/பெ. | சாமிகண்ணு |
| கிராமம் | தங்கநகர் | தாலுக்கா | துறையூர் |
| தொழில் | கள அலுவலர், SBI, Thuraiyur | சமூகம் | |
| வயது | 32 | நாள் | **14.06.2023** |

சாட்சி மனுதாரர் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட சாட்சி அழைப்பாணையின் படி கடந்த **23.02.2022** ம் தேதி ஆஜராகி ஆவணங்களை தேடி பார்த்து எடுத்து வருவதாக கேட்டுக்கொண்டதற்கிணங்க வாய்ப்பு வழங்கப்பட்டு, பின்னர் **29.04.2023** ம் தேதி உதவி மேலாளர் அனுபிரியா என்பவர் ஆஜராகி அவகாசம் கோரினார். இன்று கலையரசன், கள அலுவலர் பாரத ஸ்டேட் வங்கி. துறையூர் ஆஜரானார், அவருடைய சாட்சி கீழ்கண்டவாறு பதிவுசெய்யப்படுகிறது,

14.06.2023



**EA.No.02/2020 in EP.No.10/2019 in OS.No.3555/1979** ம.சா.2– கலையரசன்

முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். **அந்த அழைப்பாணை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** திருச்சி முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில், துறையூர் பாரத ஸ்டேட் வங்கியின் சார்பாக அசல் வழக்கு எண்.478/1993 என தாக்கல் செய்து, அந்த வழக்கில் வங்கிக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக நிறைவேற்று மனு எண்.71/1998 தாக்கல் செய்யப்பட்டு, துறையூர் டவுனை சேர்ந்த சுகுமார் மனைவி ஜோதி என்பவர் ஏலம் எடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

திருச்சி முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில், துறையூர் பாரத ஸ்டேட் வங்கியின் சார்பாக அசல் வழக்கு எண்.478/1993 என தாக்கல் செய்வதற்கு முன்பு, இந்த மனு சொத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட அசல் வழக்கு எண்.478/1993

14.06.2023



பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் குறிப்பிட்டிருந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அந்த ஆவணங்கள் எங்களிடம் இல்லை.

**ரூ.300/- படி பெற்றுக்கொண்டேன்.**

**குறிப்பு- நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.